**இலங்கை சமூக பாதுகாப்புச் சபை - 2019**

------------------------------------------------------------------------

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

------------------------------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

**1.5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 1996 இன் 17 ஆம் இலக்க இலங்கை சமூக பாதுகாப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் 15(2) ஆம் பிரிவின் பிரகாரம் தமக்கு வழங்கப்பட்ட உறுதியின் கீழ் பிரதிபலன் இழக்கப்படுகையில் அது பற்றி சபையினால் அந்த பங்களிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். 2019 திசெம்பர் 31 வரை சபையினால் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முறைமைக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொத்த பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 750,021 ஆக இருந்ததுடன் இப்பங்களிப்பாளர்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்ற இப்பங்களிப்பாளர்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்ற பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 288234 ஆக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணனி மென்பொருள் முறைப்படி அமுல்படுத்தப்படாததன் காரணமாக 2015 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் செயற்படாதுள்ள பங்களிப்பாளர்கள் இனங்காணப்படாதிருந்ததுடன் இதன் காரணமாக அத்திகதியின்பின்னர் நலன்கள் இழக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு அது தொடர்பாக அறிவிக்க முடியாதிருந்தது. | திட்டத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற அங்கத்தவர்களின் தகவல்களை சேகரித்து வருகின்ற கணனி மென்பொருள் முறைப்படியாக அமுல்படுத்தப் படாமையின் காரணமாக செயற்பாடற்ற அங்கத்தவர்கள் தொடர்பாக சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாமையால் இந்நிலைமை உருவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. | சபையின் பிரதான செயற்பாடு இந்த ஓய்வூதிய முறைமையை அமுல்படுத்துவது என்பதனால் இது தொடர்பான தரவு முறைமையை நாளதுவரையாகப் பேணுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1999 இன் 33 ஆம் இலக்க இலங்கை சமூக பாதுகாப்புச் சபை (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 6(அ)(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமூக பாதுகாப்பு, சமூக நலன்புரி, காப்புறுதி, ஆயுட்கால மதிப்பீடு, | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட துறைகளை உள்ளடக்கும் வகையில் ஒரு தொழில்நுட்பக் குழுவை நியமிப்பதற்கு | நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்காக தாமதமின்றி குழுவை நியமிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| நிருவாகம் நிதி அல்லது முகாமைத்துவம் ஆகிய துறைகளில் அனுபவம் உள்ள அல்லது இயலுமையை காட்டியுள்ள நபர்களுக்கு மத்தியில் ஒன்பது நபர்களுக்கு மேற்படாத எண்ணிக்கையைக் கொண்ட ஒரு தொழில்நுட்ப ஆலோசனைக் குழு அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும். 2018 மே மாதத்தின் பின்னர் அவ்வாறான ஒரு குழு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் சேவையிலிருந்து விலகிச் சென்ற 48 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,335,805 அறவிட வேண்டியிருந்தது. அவற்றுள் காணப்பட்ட 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 441,146 ஆகும். | 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 441,146 மீதியில் ரூபா 176,004 பணம் தற்பொழுது 06 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதியை அறவீடு செய்வதற்காக ஞாபகப்படுத்தல் கடிதங்கள் உரிய உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது. | சபையினால் அறவிடப்பட வேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,647,530 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 3,126,602 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 3,520,928 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு ஆண்டிற்கான சம்பளம் மற்றும் படிகள் செலவு அதிகரித்து செல்லல் பிரதானமாக காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக ‘‘சுரெகும’’ மற்றும் ‘‘ஆரக்ஸாவ’’ ஆகிய 02 சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் 50,000 பங்களிப்பாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 37,279 பங்களிப்பாளர்கள் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அது முன்னைய ஆண்டில் சேர்த:துக் கொள்ளப்பட்ட பங்களிப்பாளர்களின் எண்ணிக்கையான 83,346 உடன் ஒப்பிடும் போது 53 சதவீத குறைவாகும். மீளாய்வாண்டில் 03 மாவட்டங்களில் சேர்த்துக் கொள்ளல் 100 இனை விட குறைவடைந்திருந்ததுடன் 08 மாவட்டங்களில் அந்த எண்ணிக்கை 500 இனை விடக் குறைவடைந்திருந்தது. | மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரின் தீவிர ஈடுபாட்டின் பேரில் கிராம உத்தியோகத்தர்கள் அல்லாத ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் 2019 ஆம் ஆண்டில் 38,543 அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்நிலைமையானது சபைக்கு நேரடியாக நிருவகிக்க முடியாத நிலைமையாகும். | பங்களிப்பாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் முன்னைய ஆண்டின் போது பங்களிப்பாளர்களைச் சேர்த்துக் கொள்ளும் முறைமைக்காக கிராம உத்தியோகத்தர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அச்சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாமையின் காரணமாக 72 உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொண்டு ஒரு சந்தைப்படுத்தல் வலையமைப்பு தோற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் இதற்கான ஒட்டுமொத்த செலவு ரூபா 3,645,670 ஆக இருந்தது. இச்சந்தைப்படுத்தல் | அரசாங்க உத்தியோகத்தர் வலையமைப்பின் சேவை கிடைக்காமையுடன் வியாபாரத்தின் அளவின் அடிப்படையில் தரகுப் பணத்தைச் செலுத்துவதற்கு உட்பட்டு சுதந்திர சந்தைப்படுத்தல் வலையமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அந்த சந்தைப்படுத்தல் வலையமைப்பு பணிப்பாளர்கள் சபை அங்கத்தவரின் செயற்பாடு மற்றும் நேரடி மேற்பார்வையின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டதுடன் சந்தைப்படுத்தல் தலைவர் மற்றும் மாகாண | பங்களிப்பாளர் களைச் சேர்த்துக் கொள்வதற்கு முறையான வேலைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வலையமைப்பின் மூலம் மே மாதத்திலிருந்து பங்களிப்பாளர்களைச் சேர்த்துக் கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2019 ஒப்தோபர் மாதத்திலிருந்து அந்த உத்தியோகத்தர்களும் உரிய செயற்திட்டத்திலிருந்து விலகியதன் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறை அமுல்படுத்தப்படவில்லை. | தலைவரிடமிருந்து எதிர்பார்த்த செயற்முன்னேற்றம் கிடைக்காமையும் 2019 ஒக்தோபர் மாதத்திலிருந்து எதுவித அறிவித்தலுமின்றி சேவையிலிருந்து நீங்கியுள்ளதனால் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டது. | |
| (இ) | சபையினால் கலாச்சார அலுவல்கள் அமைச்சுடன் ஒன்றிணைந்து அமுல்படுத்தப்படுகின்ற கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்திற்காக கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 94,000,000 சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த ஓய்வூதியத் திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 சனவரி மாதம் வரை 165 பங்களிப்பாளர்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2020 ஆகஸ்ட் வரை அதன் செயற்திறனான பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 71 நபர்கள் மாத்திரமாக இருந்தது. | கலாச்சார அலுவல்கள் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து கலைஞர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள கலைஞர்களுக்கு தவணைப் பணக் கொடுப்பனவிற்காக தொடர்ச்சியாக ஞாபகப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. தவணைப் பணம் செலுத்தாத அங்கத்தவர்களின் தகவல்களை கலாச்சார விவகார திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | சபையினால் கலாச்சார விவகார அமைச்சுடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | சபையினால் தென் கொரியாவில் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை வேலையாட்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தென் கொரியாவின் தேசிய ஓய்வூதிய நிறுவனத்துடன் மீளாய்வாண்டின் யூன் 18 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் 06 செயற்பாடுகள் | கொரியா உள்ளடங்கலாக ஏனைய நாடுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக ஓய்வூதியங்களைத் தயாரிப்பதற்காக எங்கள் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருவதுடன் இந்த உடன்படிக்கையின் அடிப்படைச் செயற்பாடானது பதவியணியினருக்கு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதனைத் தவிர கொரியாவிலுள்ள இலங்கை தொழிலாளர்களுக்கு | தென் கொரியாவில் சேவையாற்றுகின்ற இலங்கை தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தினை அமுல் படுத்துவதற்காக இப்புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது என 2017 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 2017/232 ஆம் |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்டிருந்தும் மேலே காட்டப்பட்டுள்ளவாறு தென் கொரியாவில் சேவையில் ஈடுபட்ட இலங்கை தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தும் அடிப்படைச் செயற்பாடு அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆகஸ்ட் மாதம் வரை உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டு ஒரு ஆண்டு முடிவடைந்திருந்த போதிலும், அதன் செயற்பாடு எதனையும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியம் செலுத்துவது அல்ல. | இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் காட்டப்பட்டிருந்தது. இதற்கிணங்க உடன்படிக்கையின் தொடக்க குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 நிதிகளின் குறைந்த பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) சபையினால் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத்தை முகாமை செய்யும் தகவல் முறைமையைக் கொள்வனவு செய்வதற்கு 2018 ஆம் ஆண்டின் போது ஒரு வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 நவம்பர் மாதமளவில் உரிய செயற்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய 5 கட்டங்களில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ஒரு கட்டம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும், இச்செயற்பாட்டிற்காக 4 ஆண்டுகள் காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 12,511,000 தொகையான திறைசேரி நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் போதும் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | இறுதியாக அங்கீகரிக்கப்பட்ட 3 ஆவது கால அட்டவணையின் பிரகாரம் 2019 நவம்பர் 01 ஆந் திகதியளவில் மென்பொருள் முறைமையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை முடிவுறுத்தி எங்கள் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மென்பொருளை அபிவிருத்தி செய்து எங்களுக்கு வழங்குவதற்கு எபிக் லங்கா நிறுவனம் தவறியிருந்தது என தெரிவிக்கப்பட்டிருந்தது. | சபையின் கணனி முறைமையை நாளதுவரையாகப் பேணுவதற்கு தேவையான நடவடிக்கையை விரைவாக மேற்கொண்டு பங்களிப்பாளர் செயற்பாடற்ற நிலைமைக்கு மாற்றம் பெறுவதனை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சமூக பாதுகாப்புச் சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் 5 ஆம் மாடியில் புதிய கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக ஒரு தொழில்நுட்ப அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளாது 2019 யூலை மாதத்தின் போது ஒரு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இதற்கு மத்தியில் 2019 நவம்பர் மாதத்தின் போது மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப அறிக்கையின் பிரகாரம் 5 ஆவது மாடியினை நிர்மாணிப்பதற்கு கட்டிடம் வலுவற்றது என தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 731,244 தொகை இதற்காக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் சமூக பாதுகாப்பு அமைச்சினால் இதற்காக வழங்கப்பட்ட ரூபா 540,000 தொகை பயிற்சி ஆய்வுச் செலவுகளின் கீழ் செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த அனைத்து செலவுகளும் விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக சமூக பாதுகாப்பு அமைச்சினால் ரூபா 540,000 பணம் வழங்கப்பட்டிருந்தது. 2019-12-31 ஆந் திகதி அச்செலவு மீண்டுவரும் செலவுகளின் கீழ் தெமாழிகளைப் பயிற்றுவித்தல் மற்றும் ஏனைய செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் அச்செலவு 2020 ஆம் ஆண்டில் ஒரு மூலதனச் செலவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தரப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப விடயங்கள் சம்பந்தமாக தேவையான ஆலோசனையின் அடிப்படையில் செயற்படுதல் வேண்டும். |

## 3.3 சொத்துக்களின் குறைந்த பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் தொடர்பான பகிரங்கப்படுத்தல் நடவடிக்கைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட இரண்டு குறுந் தகவல் திரைப்படங்களை | திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்று பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என | பகிரங்கப்படுத்தல் நடவடிக்கையினை மேற்கொள்ளும் போது அதன் தேவைப்பாடு |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கிய ரூபா 603,675 தொகையான 4762 கூட்டிணைந்த நாடாக்கள் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வழங்கப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டது. | தெரிவிக்கப்பட்டது. | தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| சபையினால் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படாதும் பெறுகை நடைமுறைகள் பின்பற்றாதும் அரசாங்க மதிப்பீடான ரூபா 165,000,000 தொகையினை மிகைத்து சபையின் தலைமை அலுவலகத்தை செயற்படுத்துவதற்கு ஓய்வூதிய நிதியிலிருந்து ரூபா 195,000,000 செலுத்தி ஒரு கட்டிடம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது சம்பந்தமாக பொது முயற்சிகளுக்கான தெரிவுக் குழுவின் பணிப்புரைகளின் பிரகாரம் நிகழ்காலப் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டு வரை கட்டிடம் கொள்வனவு செய்யப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்தும் இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு மிகையாக பணம் செலுத்தியமை சம்பந்தமாக பொறுப்புக்கூறக்கூடிய நபர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக 2020 ஆம் ஆண்டில் மீள்மதிப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளுக்கு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | கட்டிடத்தை கொள்வனவு செய்வது சம்பந்தமாக முறையான விசாரணை மேற்கொண்டு மிகைக் கொடுப்பனவு இடம்பெற்றிருந்தால் உரிய பொறுப்பான நபர்களை இனங்கண்டு மிகைக் கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் பொது முயற்சிகள் தொடர்பான தெரிவுக் குழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிகழ்காலப் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 18 ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் பதவிகளை உள்ளடக்கி 25 வெற்றிடங்கள் காணப்படுதல் சமூக பாதுகாப்புச் சபையின் பங்களிப்பாளர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் உள்ளடக்கிய நடவடிக்கைகளுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நீண்டகாலமாக ஒருங்கிணைப்பாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதனால் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் கீழ் இலங்கை நிருவாக சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஒரு உத்தியோகத்தரை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறு இல்லாமல் இருப்பதற்கு தேவையான பதவிகளுக்காக உத்தியோகத்தர் களை தாமதமின்றி சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். |